தகவல் தொட்பாடல் தொழில்நுட்பம்

தரம் -08

திரு.செ.சன்ஜித்

(1). பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

1. பின்வருவனவற்றுள் எது தகவலாகும்?
   1. 23,39,60,47,0
   2. மாணவர்களின் சராசரிப்புள்ளி
   3. ராஜா, ரவி, ஹேமா, மகேஸ்
   4. நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள்
2. கணினி உலகின் தந்தை?
   1. லேடி அடா
   2. ஹேர்மன் கொலரித்
   3. சார்ள்ஸ் பாபேஜ்
   4. பில் கேட்ஸ்
3. கணினி முறைமை முறைவழியாக்கம் தொடர்பில் சரியான ஒழுங்கைக் காட்டுவது?
   1. தரவு→தகவல்→செய்முறை
   2. தரவு→செய்முறை→தகவல்
   3. தகவல்→தரவு→செய்முறை
   4. தகவல்→செய்முறை→தரவு
4. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை கருதுக?

   A → தெரிவிப்பி ஒரு வெளியீட்டு சாதனம்

   B → சுட்டி ஒரு உள்ளீட்டு சாதனம்

   C → நெகிழ்வட்டு ஒரு உள்ளீட்டு சாதனம்

   1. A மட்டும்
   2. C மட்டும்
   3. A,B மட்டும்
   4. A,B,C யாவும்
5. PS/2 குதையில் பொருத்தப்படக்கூடிய சாதனம்?
   1. வருடி
   2. இயங்குபிடி
   3. அச்சுப்பொறி
   4. சுட்டி
6. UPS இன் பயன்பாடு

   1. தீடிரென இணையம் துண்டிக்கப்படும் போது தொடர்ச்சியாக இணைய சேவையை வழங்க பயன்படும்

   2. தீடிரென மின் துண்டிக்கப்படும் போது தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க பயன்படும்

   3. கணினியில் வலையமைப்பை ஏற்படுத்த பயன்படும்

   4. கணினியோடு துணைச் சாதனங்களை இணைக்க பயன்படும்.
7. கணினிச் சாதனங்களுக்குப் பௌதிகச் சேதம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமாகக் கொள்ள முடியாதது?
   1. மேசை ஓரங்களில் கணினிச் சாதனங்களை வைத்தல்.
   2. ஒரே மின்செருகியூடாகப் பல கணினிகளுக்கு மின்சாரம் வழங்கல்
   3. இடி, மின்னல் இருக்கும் சந்தர்ப்பங்களில் கணினியை உபயோகித்தல்.
   4. நச்சுநிரல் தாக்கம்
8. முறையான தட்டெழுத்திடலின் நன்மையாகக் கொள்ளக்கூடியது?
   1. அதிக வேகம்
   2. குறைவான ஆரோக்கியப் பாதிப்புக்கள்
   3. வேலை வாய்ப்புகள்
   4. கணிணித்துறையில் பூரண அறிவு
9. இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நன்மையல்லாதது பின்வருவனவற்றுள் எது?
   1. ஒரு விடயத்திற்கு அதிக தகவல்கள் கிடைத்தல்
   2. வாசிப்புத்திறன் வளர்ச்சியடைதல்
   3. தேடல் திறன் விருத்தியடைதல்
   4. பல்தரப்பட்ட நட்பினை மாணவர் பெறுதல்

www.ikedu.lk

10. ஒத்திசை மற்றும் இலக்கமுறை தொழில்நுட்பத்தை கலந்து தயாரிக்கப்பட்ட கணினிகள்?
    1. சிறு கணினிகள்
    2. பொது தேவைக்கான கணினிகள்
    3. கலப்பு கணினிகள்
    4. மிக்கணினிகள்
11. CRT கணினியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம்
    1. கதோட்டுக்கதிர் 2. இலக்கமுறை 3. ஒளியியல் 4. காந்த
12. திரையில் காட்சிப்படுத்தப்பட்ட உருக்களைச் சுட்டுவதற்கும் திரையின் மேல் வரைவதற்கும் ..... பயன்படுத்தப்படும்
    1. ஒளிப்பேனா 2. சுட்டி 3. விசைப்பலகை 4. வரையி
13. Laptop ஒன்றின் விசேட நன்மையாக கொள்ளக்கூடியது
    1. தனியாள் மட்டும் பயன்படுத்த முடியும்
    2. இணையத்தை இலகுவாக கையாளலாம்
    3. கொண்டு செல்லக்கூடியது
    4. பலவித வேலைகளை செய்யலாம்.
14. அனைத்து கணினிகளிலும் கட்டாயமாக இது காணப்படும்.
    1. சொற்செயலாக்கி மென்பொருள்
    2. பணிச்செயல்முறைமை
    3. நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருள்
    4. இணைய இணைப்பு
15. F1 – F12 வரையான சாவிகள் எவ்வகையானவை?
    1. எழுத்துச்சாவிகள்
    2. இலக்கச்சாவிகள்
    3. விசேட சாவிகள்
    4. செயற்பாட்டுச்சாவிகள்

(15 × 2 = 30 புள்ளிகள்)

(2). தொடர்பு படுத்துக

1. முறைவழியாக்கி	a. Windows
2. VGA துறை	b. துவிதம்
3. பணிச்செயல்முறை	c. Msword
4. பிரயோக மென்பொருள்	d. தெரிவிப்பி
5. எண்முறைமை	e. கணினியின் மூளை

(5 × 2 = 10 புள்ளிகள்)

(3). கீழே தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக

(ஈதர்நெற்துறை, PS/2, HDMI, செலுத்தி மென்பொருள், நிறுவல் நீக்கல், மின் விநியோகத் துண்டிப்பு, மீள் தொடக்கம், வன்பொருள் சார் தவறு, பிரதான சேமிப்பகத்தில், USB, நிறுவுதல், மென்பொருள் சார் தவறு)

1. ..... மற்றும் ..... என்பன கணினியுடன் தொழிற்படும் போது அநேகமாக பயனர் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளாகும்..
2. விசைப்பலகை மற்றும் சுட்டி என்பன செயற்படாமை ..... ஆகும்
3. கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கும் அனைத்து வடங்களையும் பரீட்சிப்பதற்கு முன் ..... செய்யப்படுதல் வேண்டும்.
4. விசைப்பலகை மற்றும் சுட்டி என்பவற்றிற்கு துறை ..... பயன்படுத்தப்படும்
5. RJ-45 இணைப்பி உடைய வடம் பொருத்தப்படுவது கணினியின் ..... இற்காகும்.
6. கணினிக்கு தொலைக்காட்சிப் பெட்டி இணைக்கப்படும் போது பயன்படுத்தப்படுவது ..... வடமாகும்.

www.lkedu.lk

7. கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கு சில வன்பொருள்கள் முறையாக செயற்படாமைக்குக் காரணம் அவ்வன்பொருள்களின் ……..…… நிறுவப்படாமையாகும்.
8. ……..…… வெற்றிடம் குறைவாகும் போது கணினி செயற்படும் வேகம் குறைவடையும்.
9. கணினியின் செயற்றிறனை அதிகரிப்பதற்கு அநாவசியமான மென்பொருள்களை …… செய்ய வேண்டும்.

(10 × 2 = 20 புள்ளிகள்)

பகுதி –II

சகல வினாக்களுக்கும் விடை தருக

1. சுட்டும் சாதனங்கள் 2 தருக?
2. வணிகத்தில் கணினியின் பயன்பாடு 2 தருக?
3. தகவலின் இயல்புகள் 2 தருக?
4. CRT மற்றும் LCD தெரிவிப்பிகளுக்கு இடையிலான வேறுபாட 2 தருக?
5. அச்சுப்பொறி பயன்படும் இடங்கள் 2 தருக?
6. கணினியின் இயல்புகள் 2 தருக?
7. கணினி நச்சு நிரல் தாக்கத்திற்குட்படக் கூடிய வழிகள் 2 தருக?
8. நச்சுநிரல் மற்றும் ஏனைய சட்ட விரோதச் செயல்களிலிருந்து கணினியைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகள் 2 தருக?
9. கீழே தரப்பட்டுள்ள சொற்களின் விரிவுரைகளை எழுதுக?
    1. CD …….
    2. RAM ……..
10. கணினியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் 2 தருக?

(10 × 4 =40 புள்ளிகள்)

www.lkedu.lk